கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுங்கள்.

இப்போது பெரியவர்கள், குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கும் கிடைக்கிறது

## உங்கள் பிள்ளையைப் பாதுகாருங்கள். உமது சமூகத்தைக் காத்துக் கொள்க.

## குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தங்கள் கோவிட்-19 தடுப்பூசிகள் அனைத்தையும் போட்டு கொண்டால் பாதுகாப்பாக இருப்பார்கள்.

தடுப்பூசி சிறாரும் இளைஞரும் உட்பட யாவரையும் கோவிட்-19 ஏற்படாமல் பாதுகாக்கிறது. தடுப்பூசி சிறாரும் இளைஞரும் நோயுறும் போது அவர்கள் கடுமையாக நோயுறாமலும் தடுக்கிறது.

புதிய கோவிட்-19 வகைகள் உள்ளன, அவை மிக எளிதாகப் பரவுகின்றன மற்றும் கடுமையான அறிகுறிகளை ஏற்படுத்தக்கூடும். தடுப்பூசிகள் இந்த திரிபுகளுக்கு எதிராக பாதுகாப்பை அளிக்கின்றன.

## சிறாருக்கும் இளைஞருக்கும் தடுப்பூசி ஏற்றுவது முழுச் சமூகத்தையும் பாதுகாக்கிறது.

கோவிட்-19 இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்பவர்கள் மற்றவர்களுக்கு வைரஸை பரப்புவதற்கான வாய்ப்புகள் குறைவு. தகுதி வாய்ந்த சிறுவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டதும், அது பாதுாப்பது:

- இன்னமும் தடுப்பூசி ஏற்றப்பட்டிராத அவர்களின் நண்பர்களையும் குடும்பத்தையும்.
- முதியோரையும் கோவிட்-19 இனாற் கடுமையாக நோயுறக்கூடிய உயர் இடர்ப்பாட்டிலுள்ள சிற்சில மருத்துவ நிலைமைகளைக் கொண்டோரையும்.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படுவது அதிகரிக்கும் போது, பாடசாலைகளையும் வணிகங்களையும் திறந்து வைத்திருப்பது இன்னும் எளிதாகிறது.

*4 Oct 2022*



## பாதுகாப்பானவையும் பலனுள்ளவையும்

- ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் வேறு எத்தடுப்பூசியும் அதன் பாதுகாப்புத் தொடர்பில் இந்தளவு சோதிக்கப்பட்டதில்லை.
- தடுப்பூசி வெவ்வேறு வண்ணங்கள், இனங்கள், வயதுகள் என்பவற்றைச் சேர்ந்தோர் உட்பட சிறாருக்கும் இளைஞருக்கும் பெரியோருக்கும் பாதுகாப்பானதென எண்பிக்கப்பட்டுள்ளது.
- கோவிட்-19 தடுப்பூசிகள் பருவமடைவதையோ அல்லது எதிர்காலத்தில் கருவுறுதலையோ பாதிக்காது. தடுப்பூசிகள் உங்கள் குழந்தை வருங்காலத்தில் மகப்பேறு அடைவதை எந்தவிதத்திலும் பாதிக்காது.

## யாவருக்கும் இலவசம்

- **குடிவரவு நிலை** யாதாயிருப்பினும் நீங்களும் உங்கள் பிள்ளையும் ஒரு இலவசத் தடுப்பூசியைப் பெறலாம்.
- ஒரு இலவசத் தடுப்பூசியைப் பெற நீங்களோ உங்களது பிள்ளையோ **ஒரு அடையாள அட்டையைக் காட்ட** அல்லது **சுகாதாரக் காப்புறுதியைக் கொண்டிருக்க** வேண்டியதில்லை.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

**இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus**

# எதை எதிர்பார்க்கலாம்

உங்கள் பிள்ளைக்கு கோவிட்-19 -இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டு இருந்தால், பள்ளிக்குச் செல்லும்போது, விளையாடும்போது, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரைச் சந்திக்கும்போது அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். நீங்கள் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்வது என்பது தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெறுவதும் மற்றும் தகுதி பெறும்போது பூஸ்டர் டோஸ்களைப் பெறுவதும் ஆகும்.



### சந்திப்பின் போது:

- தாதியோ மருத்துவரோ உங்களது பிள்ளைக்குத் தடுப்பூசி வழங்க முன்னர், அவர் உங்களுக்கு அதைப் பற்றிக் கூறுவார், உங்களது பிள்ளையின் மருத்துவ வரலாற்றை மீளாய்வு செய்வார், உங்களிடம் ஏதேனும் கேள்வி இருக்கிறதா என்று உங்களிடம் கேட்பார்.
- உங்களது பிள்ளைக்கு ஒவ்வாமை இல்லை என்பதை உறுதி செய்ய, அவர் 15–30 நிமிடங்கள் காத்திருக்க வேண்டியேற்படும்.

## மிதமான பக்க விளைவுகள் சாதாரணமானவை

பக்க விளைவுகள் என்றால் உங்களது பிள்ளைக்கு கோவிட்-19 உள்ளதென்று பொருளல்ல.

பக்க விளைவுகள் தடுப்பூசி உங்களது பிள்ளையின் உடலுக்கு கோவிட்-19 இற்கு எதிராக எப்படிப் போராடுவதென்று கற்பிக்கிறது.

மிதமான பக்க விளைவுகளில் உள்ளடங்கக் கூடியன:

- ☐ தடுப்பூசி வழங்கப்பட்ட இடத்தில் கையில் வலி அல்லது வீக்கம்
- ☐ களைப்பு
- ☐ தலைவலி
- ☐ தசை வலி
- ☐ குளிர் காய்ச்சல்
- ☐ காய்ச்சல்
- ☐ குமட்டல்

## கடுமையான பக்க விளைவுகள் மிக அரிதானவை

**தடுப்பூசிகள் பாதுகாப்பானவை. தடுப்பூசியுடன் ஒப்பிடும்போது உங்கள் பிள்ளைக்கு COVID-19 இலிருந்து கடுமையான சிக்கல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.**

சில இளம் ஆட்கள் (இதயத்தசை அழற்சி அல்லது இதயவுறை அழற்சி எனப்படும்) இதய அழற்சி அல்லது குருதி உறைதல் போன்ற பக்க விளைவுகளை அனுபவித்துள்ளனர்.

- கடுமையான பக்க விளைவுகள் **ஆகவும் அரிதானவை**
- கடுமையான பக்க விளைவுகள் **சிகிச்சை செய்யப்படக்கூடியவை**, அவையுள்ள பெரும்பாலானோருக்கு அவை குணமடைந்துள்ளன
- தடுப்பூசியின் நன்மை அதிலிருந்து ஏற்படக்கூடிய எந்த இடர்ப்பாட்டை விடவும் மிகவும் பயனுள்ளது

## மேலும் தகவல்களுக்காக உங்களது மருத்துவரிடம் கேளுங்கள்

கோவிட்-19 தடுப்பூசிகளையும் உங்களது பிள்ளைக்குத் தேவைப்படக்கூடிய ஏனைய தடுப்பூசிகளையும் பற்றி மேலும் அறிய உங்களது மருத்துவரிடமோ தாதியிடமோ உரையாடுங்கள்.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus